16.05.2025

**DVC. No.119/2022 :**

அசா.1**– லதா . க–பெ. ஜெயக்குமார்**

**அசா.1 அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.**

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

குறுக்கு விசாரணை.

நான் பொறியியல் முதுகலை பட்டம் பெற்று திருச்சி NIT கல்லுரியில் முனைவர் பட்டம் பெறுவதற்கு சேர்ந்து படித்துக்கொண்டிருக்கும் பொழுது எனக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணம் நடந்த சில நாட்களிலேயே மீண்டும் முனைவர் பட்டம் பெறுவதற்கு திருச்சியில் தங்கி படிப்பை தொடர்ந்தேன் என்றால் சரிதான். அப்போது படிப்பை தொடர்வதற்கு எனது கணவர் தரப்பில் இருந்து எவ்வித ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான். எனது கணவர்க்கு எங்கு வேலை செய்கிறோர் என்றால் துபாயில். துபாயில் வேலை செய்வது ஒப்பந்த அடிப்படை முறையில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். எனது கணவருக்கு தனியார் கம்பெனியில் 1 அல்லது 2 வருடம் ஒப்பந்த பணி செய்து விட்டு வருவார் என்றால் சரிதான். எனக்கு வங்ககி கணக்கு உள்ளது என்றால் சரிதான். துபாயில் இருந்து எனது கணவர் எனது வங்கி கணக்கிற்கு பணம் அனுப்பினார் என்றால் சரியல்ல. எனது காரைக்குடி SBI வங்கி கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். ஏற்கனவே நான் ஒரு DVC வழக்கு நீதிமன்றதில் தாக்கல் செய்து திரும்ப பெற்றுள்ளேனா என்றால் சரிதான். எனது கணவர் ஜெயக்குமார் எனக்கு எதிராக விவாகரத்து வழக்கு தாக்கல் செய்து பின்பு திரும்ப பெற்று விட்டார் என்றால் சரிதான்.

எனது தரப்பில் இருந்து எனது கணவர் மற்றும் அவர்கள் குடும்பத்தின் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அதே போல் எனது கணவர் குடும்பத்தாரும் எனது குடும்பத்தார் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்வதற்கு விவரங்கள் சொன்னது யார்

என்றால் நான் தான் சொன்னேன். என் மனுவில் நிகழ்வு, நாள், மாதம், வருடம் என்று குறிப்பிட்டு நான் விவரங்களை சொல்லவில்லை என்றால் சிலவற்றிற்கு சொல்லியுள்ளேன். எனக்கு துன்புறுத்தல் ஏற்பப்பட்டதாக எந்த வித குறிப்பிட்ட நாட்கள், தேதியை மனுவில் குறிப்பிடவில்லை என்றால் மனுவில் சொல்வது போல் தான் நியாபகம் இருக்கிறது. நான் திருமயம் சண்முகநாதர் பொறியியல் கல்லூரியில் உதவி பேராசிரியராக பணியாற்றினேன் என்றால் சரிதான். எனது மனுவில் எனது தகப்பனாரும், தாயாரும் மிகவும் சிரத்தை எடுத்து எனது மகளை கவனித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் என் கணவர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க தொடங்கியதில் இருந்து நான் எந்தவித பணிக்கும் செல்லவில்லை, செல்ல முயற்சிக்கவும் இல்லை என்றால் சரிதான். எனது வீட்டில் பெற்றோர்கள் ஜெயக்குமாரை மருமகனாக தேர்ந்தெடுத்தற்கு ஓரே காரணம் அவரது கல்வித்தகுதி மட்டுமே என்றால் சரிதான். அதேபோல் என்னுடைய கல்வித்தகுதி அடிப்படையாக கொண்டு தான் என்னையும் மருமகளாக தேர்ந்தேடுத்தார்கள் என்றால் சரிதான்.

நானும் என் கணவரும் மதுரை அருகே உள்ள திருமங்கலத்தில் தனிக்குடித்தனம் நடத்தினோம் என்றால் சரிதான். அப்போது என்னுடைய ஆலோசனை படி திருமங்கலத்தில் பேன்ஸிஸ்டோர் ஒன்று தொடங்கினோம் என்றால் சரியல்ல. நான் போவதற்கு முன்பே கடை இருந்ததது. அந்த பேன்ஸி ஸ்டோரை முறையாக நான் இருந்து கவனிக் வேண்டும் என்று எனது கணவர் சொன்னார் என்றால் தவறு நான் கடையை பார்த்துக்கொள்ள தேவையில்லை என்று சொல்லிவிட்டார். திருமங்கலத்தில் தனிக்குடித்தனம் இருந்த போது மகிழ்சியாக வாழ்தோம் என்றால் சரியல்ல. சண்டைசச்சரவுகளுடன் 3 மாதம் வாழ்ந்தோம்.

நான் திருமங்கலத்தில் வாழ்ந்த போது எனது கணவருடன் வீண் சண்டையோ வாய்வார்த்தைகளோ செய்தது இல்லையா என்றால் நானும் சண்டை போட்டுள்ளேன் திரும்பி பேசியுள்ளேன். என் கணவர் மீது போலீசாரிடம் கொடுக்கப்பட்டுள்ள புகாரில் என்னுடைய நகைகள், சீர்வரிசைகள் பண்டங்களை திரும்ப கேட்டு நியாமான முயற்சியை செய்தேன் என்றால் சரிதான். என்னுடைய நியாயமான முயற்சியில் சீர்வரிசை பண்டங்கள் மற்றும் நகைகளை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால்

சரியல்ல சில பொருட்களை நான் பெறவில்லை அது என் தகப்பனாருக்கே தெரியும். நானும் என்னுடைய தகப்பனாரும் சீர்வரிசை பண்டங்களை திரும்ப பெற்றுக்கொண்டு காவல் நிலயத்தில் எழுதி கொடுத்துவிட்டோம் என்றால் சரிதான். எனது நகைகள் எல்லாம் என்னிடம் இருக்கிறது என்றால் அது குறித்து என் தகப்பனாருகே தெரியும். மேற்படி என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் எனது தகப்பனார் காவல் நிலையத்தில் இருந்து எனக்கு போடப்பட்ட நகைகள் மற்றும் சீர்வரிசை பொருட்களை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்று 15.10.2022 ல் கையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான்.

நான் எனது தகப்பானார் வீட்டில் 28.12.2021 முதல் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். அவர் என்னை அந்த தேதியில் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். இதற்கிடையில் எனது மாமனார் கோபாலகிருஷ்ணன் எனது பேரிலும், எனது தகப்பனார் பேரிலும் திருநகரில் என் மாமனார் மாமியார் குடியிருந்த வீட்டை என் கணவர் பெயரில் எழுதி வைக்குமாறு வற்புருத்தி புகார் கொடுக்க வைத்தாக சொன்னால் சரியல்ல. என் மாமனார் கொடுத்த புகார் மனுவானது திருமங்கலம் காவல் நிலையம் மனு எண். 595/2021 ஆக பதிவாகியுள்ளது என்று சொன்னால் அதை பற்றி எனகு தெரியாது. 3 வது எதிர்மனுதாரர் எனது மாமியார் என்றால் சரிதான். திருநகர் வீட்டின் உரிமையாளர் எனது மாமியார் இந்திரா தான் என்றால் சரிதான்.

நான் நிரம்ப கல்வி தகுதி மற்றும் வேலை வாய்ப்பு இருந்தும் நான் என் கணவரிடம் பணம் பறிக்கும் நோக்கத்தோடு வேலைக்கு போகாமல் புறக்கனித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் மீது தேவக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் எனது கணவர் விவாகரத்து வழக்கு எண். 21/2022 தாக்கல் செய்து அதில் நான் வழக்கறிஞர் மூலம் ஆஜர் ஆகி உள்ளேன் என்றால் சரிதான். அந்த விவாகரத்து வழக்கில் சாப்பு நீதிமன்றம் அளித்த தீர்ப்பு **எ.ம.சா.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த விவாகரத்து வழக்கில் என்னால் என் கணவருக்கு ஆரம்பத்தில் இருந்து ஏற்படுத்தப்பட்ட துன்பங்கள், துயரங்கள் அணைத்தும் சொல்யுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது சொல்லிய அணைத்தும் பொய்யானவை. என்னிடம் என் கணவர் தரப்பில் இருந்து பெறப்பட்ட 8 பவுன் தாலி செயின் என்னிடம் இல்லை மோதிரமும் என்னிடம் இல்லை அவை இரண்டும் என்னிடம் இருப்பதாக சொல்வது சரியா என்றால், தாலி மட்டும்

என்னிடம் இருக்கிறது. என் கணவர் பெயரில் சொத்து இருப்பதற்காக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என் கணவரின் சொத்து இருப்பதாக காட்டக்கூடிய விவரம் என் மனுவில் சொலல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பெயரில் அவருக்கு உரிமம் பெற்ற சொத்துக்கள் அவரது படிப்பை தவிர எந்த ஒரு சொத்தும் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் அவருக்கு சொத்து இருக்கா இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியாது. அதனால் எந்த வித ஆவணமும் நான் சமர்ப்பிக்கவில்லை.

என் குழந்தை என் கணவர் ஏற்று பராமரிக்க தயாராக இருக்கிறார் எனறால் சரியல்ல. எனக்கு பெண் குழந்தை பிறந்ததது தான் இந்த பிரச்சனை அணைத்திற்கும் காரணம். எனது வளைகாப்புக்கு என் கணவர் வந்தார் என்றால் சரிதான். வளைகாப்புக்கு நான் என் கும்பத்தினர் அனைவரும் என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ளது போல் மகிழ்ச்சியாக கலந்து கொண்டோம் என்றால் சரிதான். இந்த புகைப்படத்தில் உள்ளது போல் எனது மாமனார், மாமியார், கணவர் அணைவரும் கலந்து கொண்டது சரிதான் என்றால் சரிதான். மேற்படி ஆட்சேபனையுடன் **எ.ம.சா.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு பிறந்த பெண் குழந்தை பார்ப்பதற்கு எண் கணவர், அவரது பெற்றோர் மற்றும் சகோதரர் மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றால் சரிதான்.

**Sd./ J. Karmegakannan.B.A.,B.L**
**Judicial Magistrate, Karaikudi.**